## மோட்டார் வாகன பொறியியல் பயிற்சி நிறுவனம் - ஒருகொடவத்த
## (AETI – Japan Tec)
# பயிலுநர்களின் ஆட்சேர்ப்பு - 2026 ஆம் ஆண்டு

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வித் திணைக்களம்
தொழிற் கல்வி பிரிவு தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை

**தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் நோக்கெல்லையின் கீழ் செயற்படும் மோட்டார் வாகன பொறியியல் பயிற்சி நிறுவனம் பின்வரும் முழுநேர கற்கைகளுக்காக இலங்கை இளைஞர்கள் இடமிருந்து (16–25 வயதுக்கு இடைப்பட்டவர்கள்) 2026 ஆம் ஆண்டுக்காக பயிலுநர்களின் ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

| | முழு நேர கற்கைகள் | காலம் | கற்கை கட்டணம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1.1 | Automobile Technician | 03 ஆண்டுகள் | 200,000 ரூபா | க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரு அமர்வுகளில் சிங்களம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்<br>2026-01-01 இல் 16-25 வயதுக்கு இடையே இருத்தல் வேண்டும். பால் (ஆண்/ பெண்) |
| 1.2 | Automobile Electrician | 03 ஆண்டுகள் | 200,000 ரூபா | |
| 1.3 | Machinist / CNC | 03 ஆண்டுகள் | 170,000 ரூபா | |
| 1.4 | Automobile A/C Technician | 02 ஆண்டுகள் | 70,000 ரூபா | |
| 1.5 | Automobile Tinker | 1½ ஆண்டுகள் | 30,000 ரூபா | அரச பாடசாலை அல்லது அரசு அங்கீகரித்த பாடசாலை ஒன்றில் தரம் 8 சித்தி<br>2026-01-01 இல் 16-25 வயதுக்கு இடையே இருத்தல் வேண்டும். பால் (ஆண்/ பெண்) |
| 1.6 | Automobile Printer | 1½ ஆண்டுகள் | 30,000 ரூபா | |

**முழுநேர (பகல்) கற்கைக்காக பயிலுநர்களின் ஆட்சேர்ப்பின் பின், 50% வீத மேலதிக கற்கைக் கட்டணத்துடன் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான பயிலுநர்கள் முழு நேர (மாலை) கற்கைக்கு இணைக்கப்படுவர்.**

### சான்றிதழ்களை வழங்கல்

தேசிய தொழில் தகைமை இறுதி மதிப்பீட்டில் சித்தி பெற்ற பயிலுநர்கள் தேசிய தொழில் தகைமை தரம் - 4 சான்றிதழ் (மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டது) மோட்டார் வாகன பொறியியல் பயிற்சி நிறுவனத்தின் சான்றிதழுடன் சேர்த்து வழங்கப்படும்.

### விண்ணப்ப நடைமுறை

விண்ணப்பதாரர்கள் மோட்டார் வாகன பொறியியல் பயிற்சி நிறுவனத்தின் மக்கள் வங்கியின் தெமட்டகொடை கிளையில் 071100103320674 என்ற கணக்கு இலக்கத்திற்கு 1000 ரூபாவை செலுத்தி வங்கியில் இருந்து பெற்ற ரசீதை விண்ணப்பத்தின் பின்பக்கத்தில் தரப்பட்டுள்ள இடத்தில் ஒட்டுதல் வேண்டும். (ஒன்லைன் மற்றும் CDM கொடுப்பனவுகள் ஏற்கப்படாது. வைப்பின் பெயர் மற்றும் தே.அ.அ. இலக்கம் ரசீதில் குறிப்பிடப்படுதல் வேண்டும்). அல்லது www.naita.gov.lk என்ற இணையதளத்திற்கு பிரவேசிக்கவும்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை 2025 செப்டெம்பர் 10 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் "தலைவர்/ அதிபர், மோட்டார் வாகன பொறியியல் பயிற்சி நிறுவனம், இல.: 69/A, பேஸ்லைன் வீதி, ஒருகொடவத்தை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். (வர்த்தமானி அறிவித்தலில் (சிங்களம்) தரப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தை பயன்படுத்தவும்). கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பயிலுநர்களின் ஆட்சேர்ப்பு – 2026" என்று குறிப்பிடவும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்,
பதிவாளர்
**தொ. இல. 0112-572977 மற்றும் 0112-531844**
2025 ஓகஸ்ட் 8ஆம் திகதி சிங்கள வர்த்தமானியை பார்க்கவும்.

தலைவர்,
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை
இல. 971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, வெலிகடை, ராஜகிரிய
011 288 782 - 5 naita sri lanka www.naita.gov.lk